<u>பத்திரிக்கைச் செய்தி</u>

வேலூர் பொதுப்பணித்துறையின் தொழில் நுட்ப கல்விப் பிரிவில் எட்டு மாவட்டங்களுக்கு (கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி) செயற் பொறியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.ஷோபனா என்பவர் ஒப்பந்ததாரர்கள் மேற்கொண்ட பணிகளின் ரசீதுகளை அனுமதிப்பதற்காக அவர்களிடமிருந்து லஞ்சமாக பெற்ற கணக்கில் காட்டப்படாத ரொக்கம் வைத்திருப்பதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலைத் தொடர்ந்து 02.11.2021 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை வேலூர் அலுவலர்கள் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து அவருடைய பொலிரோ வாகனத்தை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.5,00,000/- கைப்பற்றப்பட்டது, மேலும் அவர் தற்காலிகமாக தங்கியிருக்கும் வேலூர் தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரியின் விருந்தினர் மாளிகையை ஒட்டியுள்ள குடியிருப்பை சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.15,85,000/- மற்றும் ரூ.3,92,000/- மதிப்புள்ள 3 காசோலைகள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை வேலூர் பிரிவில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இன்று 03.11.2021, எண்.81/4, நேரு நகர் 2வது குறுக்கு தெரு, ஓசூர், என்ற முகவரியில் அமைந்துள்ள திருமதி.ஷோபனா, அவர்களின் இல்லத்தில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரொக்கம் **ரூ.2,06,90,300/- (2.06 கோடிகள்)** கைப்பற்றபட்டது. இது தவிர 38 சவரன் தங்க நகைகள், 1.320 கிலோ வெள்ளி, ரூ.27,98,000/- மதிப்புள்ள நிரந்தர வைப்புச் சான்றிதழ்கள், 11 வங்கி கணக்கு புத்தகங்கள் மற்றும் வங்கி லாக்கர் சாவி ஆகியவை அடையாளம் காணப்பட்டன.

<u>**PRESS NOTE**</u>

Based on an information that Tmt.Shobana, working as Executive Engineer, Technical Education Division of PWD, for 8 districts (Cuddalore, Villupuram, Kallakurichi, Thiruvannamalai, Vellore, Ranipet, Thirupatthur, Krishnagiri and Dharmapuri) is in possession of huge amount of money which she has collected as bribe from the contractors for sanctioning the bills of works undertaken by them, a joint surprise check was organized by the Vigilance and Anti – Corruption, Vellore Detachment along with Inspection Cell Officers of Vellore district on 02.11.2021 evening. The team intercepted the official Bolero vehicle of her, from which unaccounted money of Rs.5,00,000/- was seized and subsequently her temporary residence adjacent to the guest house at Thanthai Periyar Government Engineering College, Vellore, was also searched and an unaccounted money of Rs.15,85,000/- and 3 cheques totally valued at Rs.3,92,000/- were seized. A case has been registered in this connection by the Directorate of Vigilance and Anti – Corruption, Vellore Detachment.

During the course of investigation, house search was conducted today on 03.11.2021 at the house of Tmt.Shobana, Executive Engineer, Technical Education Division of PWD, located at D.No.81/4, IInd Main Street, 2$^{nd}$ Cross, Nehru Nagar, Hosur and seized Rs.2,06,90,300/- (**2.06 Crore**). Apart from that, 38 sovereign of gold jewels, 1.320 kg of silver, fixed deposit certificates worth Rs.27,98,000/-, 14 property documents, 11 bank passbooks and bank locker key were also identified.

